**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**P201 மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. வைக்கம் முகமது பஷீரின் சிறுகதைகளுள் தமிழாக்கம் செய்யப்பட்ட முதல் சிறுகதை எது?
2. அரசு அதிகார அறிவிப்புகளைப் பேச்சுவழக்கில் மொழிபெயர்க்க வழிகோலிய அரசன் யார்?
3. உலகளாவிய சமய வளர்ச்சியில் மொழிபெயர்ப்பால் முதலிடம் பெற்ற நூல் எது?
4. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய சமயச்சீர்த்திருத்தவாதியும் மொழிபெயர்ப்பாளரும் யார்?
5. அடிலாட் என்பவர் யாருடைய அரேபிய நுலை இலத்தீனில் மொழிபெயர்த்தார்?
6. மொழிபெயர்ப்புக்கென்று இன்றும் வெளிவரும் தமிழ் இதழ் எது?
7. 'பிரிக் வெற்றி' என்னும் தொடர் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?
8. 'மெகஸ்தனீஸ்' என்னும் மொழிபெயர்ப்பு நூலை எழுதியவர் யார்?
9. சலசலோசனச் செட்டியார் எழுதிய நூலின் பெயர் என்ன?
10. மகாபாரத மொழிபெயர்ப்புப் பற்றிக் குறிப்பிடும் செப்பேடு எது?
11. சரஸ்வதி ராமனாத் மொழிபெயர்ப்புச் செய்த நூல் எது?
12. 'சாகுந்தலம்' நாடகம் எம்மொழியில் எழுதப்பட்டது?
13. நீதித்துறையில் இருந்து தமிழ் வளர்த்த பெருமக்களுள் ஒருவரைக் குறிப்பிடுக.

14. விளம்பரத்தொடர்புடைய மொழிபெயர்ப்பைத் துறைதோறும் எத்தனை வகைப்படுத்தலாம்?
15. 'வேங்கை பூத்தல்' என்பதன் உட்குறிப்பு என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பு கலையாக்கம் குறித்து எழுதுக.
2. பாரதியாரைக் கவர்ந்த ஜப்பானிய எழுத்தாளர் யார்? அவரது பாட்டுவடிவம் எது?
3. பயன் செறிந்த தெளிவான மொழியாக்கம் என்பது எது?
4. மொழிமாற்றம் என்றால் என்ன?
5. மொழிபெயர்ப்பில் 'தன்வயமாக்கல்' என்றால் என்ன?
6. மொழிபெயர்ப்புக்கும் மொழி ஆக்கத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?
7. மொழிபெயர்ப்பில் இடறிவிழும் கண்ணிகள் எவை?
8. மொழி மாற்றம் (Dubbing) – சிறு குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்களைக் காலவரிசைப்படித் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் தோற்றம் குறித்து விரித்துரைக்க.

2. (அ) மொழிபெயர்ப்பின் சிறப்புக்கூறுகளையும் மொழிபெயர்ப்பாளரின் தன்மைகளையும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) சமயநூல் மொழிபெயர்ப்புகள் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) மொழிபெயர்ப்பில் பொருள் மற்றும் நடையின் முக்கியத்துவத்தை விளக்கியுரைக்க

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்து கட்டுரைக்க.

***